# திருக்குறளில் ஐம்பூதங்கள்

**முனைவர் க.சின்னமணி**
**கௌரவ விரிவுரையாளர், எம்.வி.முத்தையா அரசினர் மகளிர் கலைக்கல்லூரி, திண்டுக்கல்**

---

## முன்னுரை

உலகப் புகழ்பெற்ற மிகச்சிறந்த தமிழ் இலக்கிய நூல் திருக்குறள் ஆகும். திருக்குறளில் உள்ள அனைத்துப் பாடல்களும் குறள் வெண்பாக்களால் ஆனதால் **‘குறள்’** என்றும் அதன் உயர்ந்த நிலை கருதி **‘திரு’** என்ற அடைமொழியுடன் **‘திருக்குறள்’** எனப்பெயர் பெற்றது. திருக்குறள் இரண்டு அடிகளில் உலகத் தத்தவம் முழுவதையும் தெளிவாக விளக்குவதால் ஈரடி நூல் என்றும் அழைக்கப்படுகிறது. உலகளவில் அதிகமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட நூல் திருக்குறள். மனித வாழ்க்கையில் நிகழும் அகம் மற்றும் புற ஒழுக்கங்கள், அறம் சார்ந்த வாழ்க்கைச் செய்திகள், கல்வி, அரசியல் போன்ற பல்வேறு செயல்பாடுகளைக் கூறுவதோடு இயற்கையின் வாழ்வையும் வளத்தையும் மிகச் சிறப்பாக எடுத்துரைக்கின்றன. நாம் வாழும் இப்பூமியானது ஐம்பூதங்களான **நிலம், நீர், காற்று, வான் தீ,** ஆகியவற்றால் உருவானது. இவற்றில் ஒன்று இல்லாவிட்டாலும் இப்பூமியில் உயிரினங்கள் வாழ முடியாது. முன்னோர்கள் இயற்கையையும் ஐம்பூதங்களையும் இறைசக்தியாக எண்ணி வழிபட்டனர். இன்றும் மக்கள் ஐம்பூதங்களை தெய்வங்களாக வழிபடுகின்றனர். உலகம் இயங்குவதற்கு ஐம்பூதங்களும் மூல காரணமாக உள்ளது. ஐம்பூதங்கள் பற்றி திருக்குறளில் வள்ளுவர் கூறும் உயரிய சிந்தனைகளை எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஐம்பூதங்கள்

இப்பிரபஞ்சம் **நிலம், நீர், காற்று, வானம். தீ** ஐம்பூதங்களால் ஆனது. இவைகளால் தான் பூமியில் வாழும் உயிரினங்கள் தோன்றின. இதனை தொல்காப்பியம்,

**நிலம் தீ நீர் விளி விசும்பொடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம்** **(தொல்.பொருள்.மரபு.நூற்.90)**

எனக் கூறுகிறது. இந்த உலகம் ஐம்பூதங்களின் கலவை என்பதை அறியலாம். ஐம்பூதங்களின் தோற்றம் குறித்து புறநானூறு பின்வருமாறு கூறுகிறது.

**மண் திணிந்த நிலனும்**
**நிலன் ஏந்திய விசும்பும்**

**விசும்பு தைவரு வளியும்**
**வளித்தலை இய தீயும்**
**தீ முரணிய நீரும் என்றாங்கு**
**ஐம்பெரும் பூதத்து இயற்கை (புறம்.பா.2:1-6)**

இந்நிலப் பரப்பின் மேல் விரிந்த வானமும், அவ்வானத்தில் மிதந்து வரும் காற்றும், காற்றில் பற்றி எரியும் தீயும், தீயில் இருந்து மாறுபட்ட நீரும் ஐம்பெரும் பூதங்கள் எனக் கூறுவதை உணரமுடிகிறது. திருநாவுக்கரசர் திருவெண்காடு பதிகத்தில் ஐம்பூதங்கள் பற்றி பதிவு செய்துள்ளார். ஐம்பூதங்கள் குணத்தால் உருவானவை என்கிறார். நிலம்-மணம், சுவை, ஒளி, ஊறு, ஓசை என்னும் குணத்தால் ஆனது. நீர்-சுவை, ஒளி, ஊறு, ஓசை, என்ற குணத்தால் உருவானது. நெருப்பு-ஒளி, ஊறு, ஓசை என்ற மூன்று குணத்தால் அமையப்பெற்றது. காற்று-ஊறு, ஓசை என்ற இரண்டு குணத்தால் உருவானது. வானம் - ஓசை என்ற ஒரே குணத்தால் ஆனவை என்கிறார். உலக இயற்கையில் அமையப்பெற்ற ஐம்பூதங்களுக்கும் திருநாவுக்கரசர் ஐந்து குணங்களை எடுத்துரைப்பது அறியத்தக்கது.

ஐம்பூதங்களை தொல்காப்பியர் உலகம் என்கிறார். புறநானூறு இயற்கையின் தோற்றம் என்றது, திருநாவுக்கரசர் ஐம்பூதங்களும் ஐந்துகுணத்தால் உருவாக்கப்பட்டுள்ளது எனக் கூறும் சிந்தனையை உணரமுடிகிறது. இதனை வள்ளுவர்,

**வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்**
**ஐந்தும் அகத்தே நகும். (குறள்-271)**

என்கிறார். வஞ்சம் பொருந்திய மனத்தை உடையவனது மறைந்த ஒழுக்கத்தை மனிதர்கள் அறியார் அவனின் உடலில் கலந்து இருக்கும் ஐம்பூதங்களும் கண்டு தம்முள் சிரிக்கும். ஆக, மனிதனின் உடல் ஐம்பூதங்களால் அடங்கியது என்பதை உணர்த்துகின்றது. இயற்கையோடு கூடிய மனிதனின் வாழ்க்கையில் உடலாய் அமைந்து மனித குணங்களை பெற்று வாழும் வாழ்க்கையோடு ஒன்றிய தன்மையுடையது. ஐம்பூதங்களை சுவை, ஒளி, ஊறு, ஓசை ,நாற்றம் என்ற குணத்தாலும் உண்ணல், காணல், மெய்உறுதல். கேட்டல், முகர்தல் என்ற மனித செயல்பாட்டின் நிலைகொண்டு ஐம்பூதங்களை உணரலாம். எனவே தான் வள்ளுவர் ஐம்புலன் உணரும் இன்பத்தை ஒரே நேரத்தில் தலைவியிடம் தலைவன் கண்டதாக குறள் 1101 கூறுகிறது. கண்டும் கேட்டும் உண்டும் முகர்ந்தும் உற்றும் அறிகின்ற ஐந்து புலன்களின் இன்பம் குணத்தாலும் செயல்பாட்டாலும் அறியமுடியும் என்பதை திருக்குறள் வழி உணரமுடிகிறது. ஐம்பூதங்கள் இயற்கையோடு ஒன்றியவை இவைகளைக் கட்டுப்படுத்தமுடியாது மேலும் உடலோடு கலந்தவை. குணத்தோடு செயல்படுபவை என்பதை அறியமுடிகிறது.

**நிலம்**

நிலம் என்பது நீர்போல் இயங்காது ஒரே இடத்தில் நிலையாக நிற்கும் பூதவகை ஆகும். நிலையாக நிற்பது என்னும் பொருளில் **'நில்'** என்னும் அடியில் இருந்து **'நிலம்'** என்னும் சொல் உருவானது. நிலத்தில் உள்ள மணலானது விவசாயத்திற்கு ஆதாரமாகி உயிர்களுக்கு உணவு கிடைக்கக் காரணமாகிறது. பயிர்கள் வளரவும், உயிர்கள் தோன்றவும், வாழ்விடமாகவும் அமைகிறது.

**காடு - முல்லை, மலை - குறிஞ்சி, நிா - மருதம், மணல் -நெய்தல்** என நிலத்திற்கு பெயர் சுட்டுகிறார் தொல்காப்பியர். மனிதர்கள் நிலத்தை **'பூமாதேவி'** என்றும் **'தாய்'** என்றும் வழங்குவது மரபு. நம்மை தாங்கி உண்ண உணவுதந்து நாம் வாழ இருப்பிடம் தருவது நிலம். இது, **ஒலி, தொடு உணர்வு, உருவம், சுவை** என்னும் நான்கு குணங்களுடன் தன் சொந்த குணமான **வாசனை** என்னும் குணத்துடன் ஐந்து குணங்களைக் கொண்டது **'மண்'** எனும் பூதம் ஆகும். ஐம்பூதங்களுக்கு இணையான ஐந்து குணங்களையும் பெற்றது நிலம். இதனை வள்ளுவர், **அகழ்வாரைத் தாங்கும் நிலம் (குறள்-151)** என்கிறார். தன்னை வெட்டுவோரை விழாமல் தாங்குகின்ற நிலம்போல தம்மை இகழ்ந்து பேசுவபரை பொறுத்தல் மனிதனின் சிறந்த பண்பாகும். நிலத்தில் உள்ள நுண்ணிய ஊட்டச்சத்துக்கள் தாவரம் செழித்து வளர உதவுகிறது. இதனை வள்ளுவர்,

**தொடிப்புழுதி க.்.சா உணக்கின் பிடித்து எருவும்**
**வேண்டாது காலப் படும். (குறள்-1037)**

எனக் கூறுகிறார். உழுத நிலத்தை ஆறவிட்டு விவசாயம் செய்தால் நிலத்திற்கு எரு போடத் தேவை இல்லை. நிலத்தில் உள்ள ஊட்டச் சத்துக்களால் மிகுந்த விளைச்சளைப் பெறமுடியும் என்ற வள்ளுவரின் அறிவியல் சிந்தனையைக் காணமுடிகிறது.

நிலத்துக்கு சொந்தக்காரன் நிலத்துக்குப் போகாமல் இருந்துவிட்டால் நிலம் அவனுக்கு உணவளிக்காது. நிலத்தை வைத்துக்கொண்டு உணவுக்கு வழியில்லை எனத் திரியும் சோம்பேறிகளைக் கண்டால் நிலமகள் தன்னுள் சிரிப்பாள். இதனை திருக்குறள்,

**இலம்என்று அசைஇ இருப்பாரைக் காணின்**
**நிலம்என்னும் நல்லாள் நகும் (குறள் -1040)**

எனக் கூறுகின்றது. நிலத்திற்கு இருக்கும் குணம் கூட மனிதர்களுக்கு இல்லை. மனிதன் தன் வாழ்க்கையை சோம்பேறி இன்றி வாழ கற்றுக்கொள்ள வேண்டும் என வழிகாட்டுகின்றார். நிலம் நம்மைத் தாங்கி வாழவைக்கும். **'பூமாதேவி'** நிலம் இல்லை என்றால் மனிதனுக்கு வாழ்க்கையே இல்லை. மனிதன் நிலையற்ற வாழ்வை விடுத்து

நிலையான வாழ்வு வாழ நிலம் துணைபுரிவதை உணர்ந்து நிலத்தை மாசுபடாமல் காக்க வழிகாட்டுகின்றது.

**நீர்**

உலக உயிர்களை வாழ வைப்பது நீர். ஒவ்வொரு உயிரிலும் முக்கால் சதவீதம் நீர் உள்ளது. குடிக்கவும் விவசாயம் செய்யவும் நீர் மிக முக்கியமாகத் திகழ்கின்றது. நீரின் தேவையை புறநானூறு,

**நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே**
**உண்டி முதற்றே உணவின் பிண்டம்**
**உணவெனப் படுவது நிலத்தொடு நீரே**
**நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு. (புறம்:18:18-21)**

எனக் கூறுகின்றது. நீரின்றி வாழமுடியாத இவ்வுயிர் உடலின் பசி நீங்க உணவு கொடுப்பவர்கள், அவ்வுடலுக்கு உயிர் கொடுத்தவர் ஆவார்கள். எனவே உடலுக்கு உயிர் போன்றதாகும் உணவு. உணவு எனப்படுவது நிலத்தோடு சேர்ந்த நீர் ஆகும். இதனை வள்ளுவர்,

**துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பாக்குத்**
**துப்பாய தூஉம் மழை. (குறள்-12)**

எனக் கூறுகிறார். உணவினால் உயிர்வாழ வேண்டிய மனிதர்களுக்கு உணவை உற்பத்தி செய்வதும். அந்த உணவை உண்ணும்போது பருகும் நீராகவும் பயன்படுவது மழைநீர் என வள்ளுவர் நீரின் பெருமையை உயர்வுபடக் கூறுவதை உணரமுடிகிறது. நற்பண்பு நிறைந்தவரிடத்தில் செல்வம் இருப்பது குடிதண்ணீர் கொடுத்து உதவுகிற குளத்தில் நீர் நிறைந்திருப்பது போன்றது, இதனை, **ஊருணி நீர் நிறைந் தற்றே உலகவாம் (குறள்-215)** எனக் கூறுகின்றார். வான் சிறப்பு அதிகாரத்தில் மழையின் தேவையை பற்றிக் கூறிய வள்ளுவர் நீர் மனிதனுக்கு எவ்வளவு முக்கியம் என்பதை உண்ணும் உணவை விட பருகும் நீர் உயிரைக்காக்கும் என்பதுபடக் கூறுகின்றார். பஞ்சத்தால் உலக மக்களைத் தவிக்கச் செய்வதும் அப்படித் தவிக்கின்றவர்களின் துன்பங்களை நீக்கித் துணை புரிந்து தூக்கி விடுவதும் மழையாகிய நீர்தான். என்ற குறள் வாயிலாக விளக்குகின்றார்.

உலக மக்கள் நீர் இல்லாமல் தவிக்கச் செய்வதும், அவர்களின் துன்பங்களை நீக்குவதும் அந்த மழைநீர் தான் என்பதை நற்றிணைப் பாடல் ஒன்று **நீர் இன்று**

**அமையாது உலகம் (நற்-பா-1)** எனக் கூறுகின்றது. நீர் இல்லை என்றால் இந்த உலகமே இல்லை என்பதையும் நீரின் முக்கிய துவத்தையும் உயர்வுபடக் கூறுவதை அறியமுடிகிறது. **நீர் இன்று அமையாது உலகுஎனின் (குறள்-20)** எனத் திருக்குறள் கூறுகின்றது. நீர் இல்லாவிட்டால் உலகத்தில் ஒரு காரியமும் நடக்காது; அந்த நீரும் மழையில்லா விட்டால் கிடைக்கப்பெறாது. உலக உயிர்கள் வாழ்ந்து கொண்டு இருக்கும்படி உலகத்தை அழிவின்றி வாழவைப்பது மழை ஆகும். உயிருக்கு உணவாக இருப்பது தண்ணீர் என்று பரிமேலழகர் தனது உரையில் கூறுகின்றார்.

உண்ண உணவு இல்லாவிட்டாலும் மனிதன் சில நாட்கள் வாழலாம் ஆனால் தண்ணீர் இன்றி ஒரு நொடி கூட வாழ முடியாது. ஆக, மனித வாழ்க்கையில் நிலத்தோடு நீரும் மிக அவசியம் என்பதை திருக்குறள் வழியாக அறியமுடிகிறது.

## காற்று

காற்று என்பது வளிமங்கள் பெருமளவில் ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்துக்கு நகரும் தன்மை பெற்றது. தமிழில் பொது வழக்கில் வளி, காற்று என்னும் இரண்டு சொற்களையும் ஒரே பொருளில் பயன்படுத்துவது உண்டு. மேலும், அறிவியலில் இவை புயல், சூறாவளி என்ற பெயரில் வழங்கப்படுகின்றன. பஞ்ச பூதங்களில் ஒன்று காற்று, காற்றில்லாமல் மனித வாழ்க்கை இல்லை உயிரே காற்றால் தான் உடலில் நிலைக்கிறது. உயிருடையன எல்லாம் காற்றின் மக்களே என்கிறது வேதம். காற்றின் மக்களாக வீமனையும், அனுமனையும் புராணங்கள் எடுத்துரைக்கின்றன. உயிர்தான் காற்று என்பதை பாரதியார்,

**உயிர்தான் காற்று**
**உயிர்பொருள், காற்று அதன் செய்கை**
**பூமித்தாய் உயிரோடிருக்கிறாள்**
**அவளுடைய மூச்சே பூமியிலுள்ள காற்று (பாரதி.கவி.காற்று.பா.5:1-4)**

எனக் கூறுகின்றார். உயிர்தான் காற்று பூமித்தாயின் மூச்சும் காற்றுதான் காற்று இருந்தால் உயிர்கள் அழிவதில்லை. அந்தக் காற்றைப் பற்றி வள்ளுவர் ஐந்து குறளில் பேசுகிறார். ஓர் இடத்தில் **'புயல்'** என்றும் நான்கு இடங்களில் **'வளி'** என்றும் காற்றை குறிப்பிடுகிறார். **ஏரின் உழாஅர் உழவர் புயல் (குறள்-14)** எனக் கூறுகின்றது திருக்குறள்.

புயலாக வீசிப் பின் மழையாகப் பொழியும் நீர்வளமானது குன்றினால், உழவர்கள் ஏர் பிடித்து உழ மாட்டார்கள் என்கிறார் வள்ளுவர். காற்று என்னும் பூதம் பொருள்களை உலர்த்தும் சக்திபடைத்தது. பல்வேறு இடங்களில் அலைந்து திரியும் குணம் கொண்டது. மனிதன் உட்பட பல்வேறு உயிரினங்கள் வாழ காற்று மிக அவசியம். வள்ளுவர் காற்றை

'வளி' என்ற சொல்லால் வழங்குகின்றார். **அல்லல் அருள்ஆள்வார்க்கு இல்லை வளி வழங்கும் (குறள்-245)** எனக் கூறுகின்றது திருக்குறள். அருளுடையவராக வாழ்கின்றவர்க்குத் துன்பம் இல்லை, காற்று இயங்குகின்ற வளம் பொருந்திய பெரிய உலகத்தில் வாழ்வோரே இதற்குச் சான்று ஆவர். அருள் உடையவர்க்கு இவ்வுலகில் துன்பம் வராது. காற்று உலவும் வளம் மிக்க இந்த பேருலகமே இதற்கு உதாரணமாகத் திகழ்கின்றது.

மருந்து அதிகாரத்தில் காற்றின் செயலை நோய்தீர்க்கும் ஒன்றாக கூறுகின்றார். மருத்துவ நூலோர் **வாதம், பித்தம், சிலேத்துமம்** என்ற சொற்களால் கூறும் மூன்றை வள்ளுவர்,

**மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்**
**வளிமுதலா எண்ணிய மூன்று. (குறள்-941)**

எனக் கூறுகின்றார். உடலில் **இரத்தம். வெப்பம், காற்று** ஓட்டங்கள் சீராக இருத்தல் வேண்டும். இவை அதிகமானாலும் குறைந்தாலும் நோய் வரும் என்கிறார். காமத்துப்பாலில் இரண்டு இடங்களில் **'காற்று'** குறிப்பிடப்படுகிறது. காதலர் இடையே காற்றுக் கூட ஊடாடாது என்றும் அவர்கள் இறுகத் தழுவும்போது காற்று நுழையும் வகையில் சிறிய இடைவெளி இருந்தாலும் தலைவி துன்பமடைவாள் என்றும் கற்பனை நயத்தோடு **குறள்.1108-**ல் கூறுகின்றார்.

நாம் வாழும் பூமியில் மட்டுமே **தண்ணீரும், காற்றும்** உள்ளது. நீரும் காற்றும் இல்லையேல் இந்த பூமி உயிரினங்கள் வாழ தகுதியற்ற ஒரு கிரகமாக மாறிவிடும். நீரும், காற்றும் தாராளமாக கிடைப்பதால் அவற்றை மாசுபடாமல் காப்பது நமது தலையாய கடமையாகும். காற்று கிடைக்காமல் இன்றைய காலத்தில் கொரோனா தொற்றால் அவதிப்படுபவர்களுக்கு ஆக்சிஜன் (காற்று) தேவைப்படுகிறது. காற்று கிடைக்கப்பெறாத மனிதர்கள் இன்று உயிரிழப்பிற்கு உள்ளாவதை இன்றைய சமுதாயத்தில் காணமுடிகிறது. இதனைத் தான் வள்ளுவர் மருந்து அதிகாரத்தில் காற்றே மருந்து என்று முன்னரே கூறி இருப்பது முற்றிலும் உண்மையாகும்.

## ஆகாயம் (வானம்)

ஆகாயம் என்ற பூதம் ஒலி என்ற குணத்துடன் தோன்றுகிறது. ஆகாயம் மற்ற நான்கு பூதங்களான காற்று, தீ, நீர், மற்றும் மண் ஆகியவைகள் தோன்றக் காரணமாக உள்ளது. ஆகாயத்தை யாராலும் தொடமுடியாது. 'ஆகாயம்' ஒரு உருவமற்ற குணங்களற்ற எதனுடனும் சேர்க்க இயலாத காரணத்தினால் இதனை வெற்றிடம் என்று அழைப்பர். சூரிய கதிர்வீச்சை தடுக்கவும், பூமியின் தட்பவெப்பத்தை சமப்படுத்தவும், மழையை பொழிவிக்கவும் ஆகாயம் தேவைப்படுகிறது. இதனை திருக்குறள்,

**நெடுங்கடலும் தன் நீர்மை குன்றும் தடிந்து எழிலி**
**தான்நல்கா தாகி விடின். (குறள்-17)**

எனக் கூறுகின்றது. கடலில் இருக்கிற தண்ணீரை ஆவியாக்கி ஆகாயத்திற்குக் கொண்டு சென்று மேகங்கள் ஒன்றாய்ச் சேர்ந்து இடி இடித்து மழை பெய்யாமல் இருந்து விடுமானால் கடலும் கூடக் குறைந்து வறண்டு போகும். ஆகாயம் மழையைப் பொழிகின்றது. இதனை திருக்குறள,

**வான் இன்று அமையாது ஒழுக்கு**
**விசும்பின் துளிவீழின் அல்லால். (குறள்-16)**

எனக் கூறுகின்றது. வானத்தில் இருந்து மழைத்துளி விழவில்லை என்றால் பூமியில் புல், பூண்டு முளைப்பதில்லை. ஆகாயம் மழை, பெய்வதற்கு முதன்மையாகத் திகழ்கின்றது. மேலும் வள்ளுவர்,

**வான்நோக்கி வாழும் உலகெல்லாம் (குறள்-542)**
**வான் நின்று உலகம் வழங்கி வருதலால் (குறள்-11)**

எனக் கூறுகின்றார். உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் மழையை நோக்கி வாழ்கின்றன. உயிர்கள் பூமியில் இருந்து கொண்டே இருக்கும்படி உலகத்தை அழிவின்றி வாழ வைப்பது மழை வானம் இன்றி இந்த மழை பூமியில் பொழியாது **வானம், நீர், நிலம், காற்று** அனைத்தும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாக இருப்பதை திருக்குறள் வழி அறியமுடிகிறது.

## தீ (நெருப்பு)

ஐம்பூதங்களில் ஒன்று நெருப்பு இது வெப்பத்தை உமிழும் தன்மை கொண்டது. ஆதிகாலத்தில் மனிதன் இரண்டு கற்களை உரசி காய்ந்த இலைசருகுகளையும் குச்சிகளையும் கொண்டு நெருப்பை உண்டாக்கினர். நெருப்பை கண்டறிந்த பின்னர் மனிதன் உணவை சமைத்து உண்டான். தேவையற்றதை எரித்து சாம்பலாக்க நெருப்பை பயன்படுத்தினர். சிவபெருமானின் நெற்றிக் கண் ஒளி தமிழ்ப்புலவர் நக்கீரரைச் சுட்டது தீயை **தீ, நெருப்பு** என்றும் வள்ளுவர் சுட்டியுள்ளார்,

**தீயினும் அஞ்சப் படும் (குறள்-202)**
**நெருப்பின் உள் துஞ்சலும் (குறள்-1049)**

எனத் திருக்குறளில் தீ, நெருப்பு என்ற சொல்லால் கூறியுள்ளார். நெருப்பு மற்றப் பொருள்களை எரித்துச் சாம்பலக்குமே அன்றி நெருப்பு வைத்தவனை ஒன்றும் செய்யாது.

தீமை செய்வது தனக்கே தீமை உண்டாக்கும் ஆகையால் அது நெருப்பை விடக் கொடியது. எனவே, நெருப்பிற்கு அஞ்சவேண்டும் என மனிதனின் செயலை நெருப்பிற்கு ஈடாகச் சுட்டி தீமையை விட்டு விலகினால் நன்மை பயக்கும் என்று மனித வாழ்க்கைக்கு வழிகாட்டும் வள்ளுவர்,

**தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு. (குறள்-1049)**

எனக் கூறுகின்றார். தீயினால் சுட்ட புண் புறத்தோடு வடு இருந்தாலும் உள்ளே ஆறிவிடும். ஆனால் நாவினால் தீய சொல் கூறிச் சுடும் வடு என்றும் ஆறாது. சுவையாகிய குணத்தைப் பெற்ற மனிதர்கள் தீய சொல் சொல்வது தீயை விடக் கொடியது எனக் கூறும் வள்ளுவரின் அறிவு நுட்பத்தை உணரமுடிகிறது.

## முடிவுரை

உலகமாகத் திகழும் ஐம்பூதங்களையும் உலகத்து மனிதர்கள் தீய வழியில் பயன்படுத்தாது வள்ளுவர் காட்டிய நல்வழியில் நிலத்தை தாயாகவும் நீரை உணவாகவும், காற்றை நோய் தீர்க்கும் மருந்தாகவும் வானம் உயிரினங்களை வாழவைக்கும் உயிர், நெருப்பின் ஒளிபோல் மனித வாழ்க்கை பிரகாசிக்க திருக்குறள் காட்டும் நல்வழியை பஞ்சபூதங்கள் கொண்டு அறிய முடிகிறது.

## அடிக்குறிப்புகள்


1. திருக்குறள் தெளிவுரை, மு.வரதராசன்
2. தொல்காப்பியம் தெளிவுரை, ச.வே.சுப்பிரமணியன்
3. பாரதியார் கவிதைகள், ச.மெய்யப்பன்
4. புறநானூறு மூலமும் உரையும், ஞா.மாணிக்கவாசகன்
5. நற்றிணை மூலமும் உரையும், கழக வெளியீடு